இயலாது, சக்தியற்றவர்களாக ஆக்கப்படுகிறார்கள். இடைக் காலத்திலாவது தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டுள்ள அரசாங்கம் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க முன்வருமா? அதற்காக அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கேட்டதற்கு ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாள் கடத்துவதன் மூலமாக தொழிலாளர்களுக்குச் சிக்கல் ஏற்படவோ, அவர்களுக்குத் தொல்லை ஏற்படவோ, அவர்கள் சோர்ந்து விடவோ, இந்த அரசு நிச்சயமாக உதவி செய்யாது, அவர் களுக்குத் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேச்சு வார்த்தை தோல்வி அடைந்தால் இந்த இன்டஸ்ட்ரியை அரசு தேசியமயமாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே,

This itself is a policy matter and a decision has to be taken by the Cabinet.

4. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(1). மானியக் கோரிக்கைகள் மீதான ஆய்வுரைகள் ஒருநாள் முன்னதாகக் கொடுக்கப்படாதது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 1977-78ம் ஆண்டிற் கான வரவு செலவு திட்டம் — மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானிய கோரிக்கை எண். 1 நில வரித்துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்:

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மானிய கோரிக்கைகள் இன்றைக்கு நூறு பக்கங்களுக்கு மேலாக இருக்கின்றன. நேற்று இரவு பத்து மணிக்கு மேல் மானியக் கோரிக்கைகள் மீதான ஆய்வுகள் வந்திருக்கின்றன. இதைப் படிப்பதை விட்டு பக்கம் பக்கமாகப் புரட்டினாலும் கூட ஒரு மணி

நேரமாகும். இதற்கு முன்பெல்லாம் ஒரு நாளைக்கு முன் பாகவே இன்றைக்கு வரக்கூடிய மானியக் கோரிக்கை பற்றிய குறிப்புகள் வருவது வழக்கம். இது நேற்று இரவு பத்து மணிக்கு மேல் கிடைத்தது. இந்த மானிய கோரிக்கைகளை எப்படிப் புரிந்து விவாதம் செய்ய முடியும்? காலாகாலத்தில் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவைகள் ஒரு நாளைக்கு முன்பாகத் தான் கொடுக்கப்படும். அச்சடித்துத் தயாரானால் முன்னாலேயே கொடுக்கப்பட்டுவிடும். ஒரு நாள் அவகாசம் போத வில்லை என்றால், இனிமேல் ஒரு நாள் முன்பாகக் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன். இப்போது பிசினஸ் அட்வைசரி கமிட்டி முடிவு செய்தபடி எடுத்துக் கொள்ளலாம்.

(ஆ) கோட்டையில் பறக்கும் தேசியக்கொடி கிழிந்து இருப்பது குறித்து.

திரு. ஆர். சுந்தரராஜன்: பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தச் சட்டமன்றப் பேரவை கட்டடத்தின் மீது தேசியக் கொடி பறக்கிறது. அந்த தேசியக் கொடி கிழிந்து அருவருப்பான சூழ்நிலையில், அவமதிக்கத்தக்க விதத்தில் இருக்கிறது. இதை உடனடியாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தேசியக் கொடியை அவமதிக்கும் எண்ணம் நம்முள் யாருக்குமே இருக்காது. அப்படிப்பட்ட தவறுகளை நிச்சயமாக அதிகாரிகள் திருத்துவார்கள் என்று உறுதி கூறு கிறேன்.

(முற்பகல் 9-50)

5. 1977-78-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,28,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".